செ.வெ.எண்:371 நாள்:08.06.2018

## பத்திரிக்கை செய்தி

## உலக முதியோர் வன்கொடுமை விழிப்புணர்வு நாள்
## நாள்: 15.06.2018

60 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களின் ஜனத்தொகையானது தற்போது வேகமாக வளர்ந்து வருகிறது. மேற்படுத்தப்பட்ட மருத்துவ சேவை, நல்ல ஊட்டச்சத்தான உணவு ஆகியவற்றால் தனிப்பட்ட மனிதனின் வாழ்நாள் நீட்டிக்கப்பட்டு வருவதால் , 2050-இல் 65 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களின் எண்ணிக்கை நம்மை மகிழ்ச்சியடைய செய்தாலும் வயது நிமித்தமாக ஏற்படும் தள்ளாமை மற்றும் இயலாமையை சோர்வின்றி உரிய வகையில் சமாளிக்க வேண்டிய கட்டாயமும் நமக்கு உள்ளது. முதியோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் அவர்கள்பாதுகாப்பான கௌரவம் மிக்க வாழ்க்கையினை வாழ்வதற்காகவும் தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை அவர்களது நலனக்காக செயலபடுத்தி வருகிறது. முதியோர் நலன் தொடர்பான மத்திய அரசின் வழிகாட்டுதல்கள் / சட்டங்களின் அடிப்படையின் படி பல்வேறு திட்டங்களையும் ஆதரவற்ற முதியோரைப் பராமரிக்க முதியோர் இல்லங்கள் நடத்துதலையும் அரசு தற்போது சிறப்பாக செயல்படத்தி வருகிறது.

முதியோர் மனோரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும், உடல்ரீதியாகவும் பல்வேறு பிரச்சனைகளை சந்திக்கின்றனர். வளர்ந்து வரும் மக்கள் தொகை உடைந்து போன கூட்டுக்குடும்பம் பொருளாதார பற்றாக்குறை மற்றும் மேல் நாட்டு கலாச்சாரத்தின் சீரழிவு போன்றவை முதியவர்களின் மீதான அக்கறையை குறைக்கின்றது.

ஆகவே நாம் முதியவர்களின் தேவையை உணர்ந்து அவர்களுக்கு சமுதாயதில் முக்கியத்துவம் அளித்திட இந்த முதியோர் வன்கொடுமை விழிப்புணர்வு நாளில் நாம் ஒவ்வொருவரும் கீழ்கண்ட செயல்களால் முதியோருக்கு உதவிட சூளுரை ஏற்போம்.

- முதியோர்களிடம் கோபத்தையும், தகாத வார்த்தைகளால் பேசுவதையும் தவிர்ப்போம்.
- முதியோர்களுக்கு எதிரான கொடுமைகள் நடந்தால் தட்டி கேட்போம்.
- முதியோர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளுக்கு செவி கொடுப்போம்.
- முதியோர்களை மனோரீதியாகவும், உடல் ரீதியாகவும் காயப்படுத்துவதை தவிர்ப்போம்.
- முதுமை காலத்தில் முதியோர்களின் நலனில் அக்கறை காட்டுவோம்.
- முதியோர்களுக்கு பேருந்து, மருத்துவமனை, வங்கி மற்றும் அனைத்து இடங்களிலும் முன்னுரிமை அளிப்போம்.
- முதியோர்களிடம் பேசுவதற்கு நேரம் ஒதுக்குவோம்.
- முதியோர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்போம்.

முதியோர்கள் கட்டணமில்லா 1253 என்ற உதவி எண் தொலைபேசி சென்னையிலும் 1800-800-1253 என்ற தொலைபேசி ஏனைய தமிழகத்திலும் பயன்படுத்தி சட்டம் மற்றும் மருத்துவ உதவி ___ முதியோர் இல்லங்களில் சேர்க்கை ___ முதியோர்பாதுகாப்பு சட்டம் 2007 பற்றிய தகவல்கள் பெற உதவலாம்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.